திரு பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, அங்கே பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் எல்லாம் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இப்போது அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. நிறைய கிணறுகள் எடுத்திருக்கிறார்கள் அங்கே. ஏராளமான ரூபாய் முதலீடு செய்திருக்கிறார்கள். மத்திய அரசு அந்தப் பண்ணையை செயல்படுத்தவில்லை என்றால் மத்திய அரசுக்கு எழுதி, அதை மாநில அரசு தன்னுடைய பொறுப்பில் எடுத்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றாலும் மத்திய அரசு கட்டாயமாகச் செயல்படுத்தவேண்டுமென வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவரவர்களே, இது பற்றி தகவல் அறிந்து ஆவன செய்யப்படும்.

ஆற்காடு தொகுதியில் சாலைகள்.

*வினா எண் 42. திரு ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஆற்காடு தொகுதியில் ஆற்காடு-ஆரணி, ஆற்காடு—செய்யாறு, புதுப்பாடி—இலுப்பை ஆகிய சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இச்சாலைகளை மேம்பாடு செய்யும்பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, இந்தப் பாதை கடந்த 7, 8 ஆண்டுகளாக சரிவர இல்லாமல் பஸ்போக்குவரத்துக்கு மிகவும் தொல்லையாக இருக்கிறது. ஆகவே, விரைவாக அந்தப் பணியை முடிப்பதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த சாலை இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி ஆரம்பிக்கப் பட்டு, நடைபெற்று வருகின்றது. இதற்காக, வந்தவாசி—ஆரணி சாலையை பழுது பார்ப்பதற்காக, 1,23.000 ரூபாயும், ஆற்காடு-திண்டிவனம் சாலையை பழுது பார்ப்பதற்காக 2,13,500 ரூபாயும் இலுப்பை சாலையைப் பழுதுபார்ப்பதற்காக 3,20,000 ரூபாயும் மதிப்பீடு செய்யப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது.

திரு பெ. சு. திருவேங்கடம். தலைவரவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள இந்தச் சாலைகள் மட்டுமல்லாமல் மற்ற சாலைகளும் வடாற்காடு மாவட்டத்தில் பழுது பார்க்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதை விரைவுபடுத்த அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த ஆண்டிலே முயற்சிகள் எடுக்கப்படும்.

கிராமப்புற வீட்டுவசதித் திட்டம்.

*வினா எண் 43. திரு வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கிராமப்புற கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் வழங்கும் கடன்களின் உயர்ந்த பட்ச அளவு ரூ. 3,000 என்பதை ரூ. 5,000 ஆக உயர்த்தும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மூலம் வழங்கப்படும் கடன் தொகை ரூ. 3,000-லிருந்து ரூ. 3,750 ஆக சமீபத்தில்தான் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, இதனை மேலும் ரூ. 5,000 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களிலிருந்து அதிகமாக தாழ்த்தப்பட்ட மக்கள்தான் கடன் பெறுகிறார்கள். குறைந்த பட்சம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காவது 5,000 ரூபாய் அளவுக்கு உயர்த்திக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, எல்லோருக்கும் பொதுவாகத்தான் 3,750 ரூபாய் என்பது.

திரு கு. பா. பழனியப்பன்: தலைவரவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெறுவதற்காகப் போடப்படும் மனுக்களை விரைவிலே பைசல் செய்வதற்கு சட்ட ஆலோசகரை முழுநேர ஊழியராக நியமிக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வீடு கட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்குவது பற்றியது. சட்ட ஆலோசகர்கள் போடுவது பற்றி அல்ல. ஆகவே அந்தக் கடன் சம்பந்தப்பட்ட மட்டிலும்தான் கேள்வி கேட்க வேண்டும்.